*1989 மே 11]* [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

Provided that no person shall be co-opted under this sub-section unless such person is eligible for being elected as a Councillor from any one of the divisions:

Provided further that the councillors so co-opted shall have all the rights, powers and privileges of an elected Councillor.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி

''பிரிவு 4, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 4 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1989) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. எஸ், ஜே சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.''

---

* 4—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

திரு. வி. தம்புசாமி : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்குச் சட்டம் அமலில் இருந்தாலும், இன்றையதினம் மது விலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டதோ என்று சொல்லும் அளவிற்குக் காவல் துறையும், சமூக விரோதிகளும் சேர்ந்து சீரழித்து விட்டார்கள் என்று சொல்லக் கூடிய அளவிற்கு நிலைமையிருக்கிறது. இந்த மது உற்பத்தி என்பது எல்லா—அனைத்து இடங்களிலும் குடிசைத் தொழிலாக மட்டு மல்ல; அது குட்டித் தொழிற்சாலையாகவும் செயல்பட்டு வருகிறது. சாராயம் மூலை முடுக்குகளில் சர்வ சாதாரணமாக இன்றையதினம் விற்பனையாகிக் கொண்டிருக் கிறது.

தமிழக அரசின் அதிகாரபூர்வமான சாராயக் கடைகளைவிட இந்தக் கள்ளத்தனமான மதுக் கடைகள் வெகுவேகமாகச் செயல்பட்டு வருகின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மை யாகும்.

சாராய வியாபாரிகள் வேலையற்ற இளைஞர்களைச் சாராய விற்பனைக்கு அதிக அளவிலே பயன்படுத்துவது மட்டுமல்ல; அவர்கள் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்ற வகையிலே இன்றையதினம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலுக்கு வேலையற்ற இளைஞர்கள் ஆளாகிக் கொண் டிருக்கக்கூடிய அபாய சூழ்நிலை வேகமாக வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

முன்பிருந்த அரசால் மது விலக்குக் குற்றத்திற்காக அபராதம் போடும் உரிமை மதுவிலக்குக் காவல் துறையிடம் ஒப்படைக்கப் பட்டு, போடப்பட்ட அந்த அபராதத் தொகையை நீதிமன்றத் திலோ அல்லது வங்கிகளிலோ கட்டமுடியாமல் காவல் துறையிடம் இருக்கிறது. அதை அரசு பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மது விலக்குச் சட்டத்தைக் கறாராக, முழுமையாக அமல் படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மது விற்பனையில் ஈடுபடுத்தப்படக்கூடிய இளைஞர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக அந்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கின்ற வகையிலே உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, கிராமங்கள்தோறும், இந்த மதுவை ஒழிப்பதற்காக மது விலக்குக் கண்காணிப்புக் கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும். அந்த மது விலக்குக் கமிட்டிகள் நிறைவேற்றுகின்ற தீர்மானத்திற்கு அந்தந்தப் பகுதிகளிலிருக்கக்கூடிய காவல் துறை அதிக முன்னுரிமை கொடுத்து அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் அந்த மது விலக்குக் கமிட்டிகள் சிலயிடங்களிலே அமைக்கப்பட்டு இருந்தாலும், அது எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைக் காவல் துறை ஏற்றுக்கொள்வது இல்லை. அத்தகைய சூழ்நிலை இன்றையதினம் இருக்கிறது. எதிர்காலத்திலே வேகமாக ஒரு போர்க்கால அடிப்படையிலே தகுந்த நடவடிக்கைகள் எடுத்து, மதுவை தமிழகம் பூராவிலும் இருந்து தடுத்து நிறுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மது விலக்கு ஆயத்தீர்வை மானியத்தின் பொழுது இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய சீரிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அரசும் அதற்கேற்ப நடவடிக்கையெடுக்கும் என்று இங்கே உறுதி அளித்து, அந்த நடவடிக்கைகள் இப்பொழுது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், அது முற்றாக, முழுமையாக நடந்ததாக நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குத் தீவிர நடவடிக்கை மேலும் தொடர்ந்து எடுக்கப்படும். ஆனால் இப்பொழுது இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவு, வரவேண்டிய நிலுவைகளை எப்படி வசூலிப்பது, அதற்கு என்ன முறைகளைக் கையாள்வது என்ற கருத்தை மையமாக வைத்துக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுவான அளவிற்கு விவாதம் நடத்தினால் நம்முடைய மசோதாக்கள் நிறைவேறுவதற்கு நீண்ட நேரமாகிவிடும்.

திரு வி. தம்புசாமி : இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமர்கிறேன், நன்றி.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முதல்வரவர்கள் இங்கே சொன்னதற்குப் பிறகு நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. ஒரேயொரு செய்தி. குடிசைத் தொழில்களை நாம் வளர்க்க வேண்டுமென்று நினைக்கின்றோம். இப்பொழுது எல்லாயிடங்களிலும் குடி செய் தொழில் மட்டுமே (சிரிப்பு) நடந்து கொண்டிருப்பதாக நமக்குத் தகவல் வருகிற காரணத்தினால்—முதல்வரவர்களும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள், மகிழ்ச்சி.

[திரு. குமரி அனந்தன்] [1989 மே 11

ஒன்றே ஒன்று: மது தயாரிக்கிற தொழிற்சாலையை நாம் ஆரம்பிக்க வேண்டுமென்று இங்கே ஒரு முடிவு இருக்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும் கூட மதுவைப் பூரணமாக ஒழிப்பது என்ற முடிவிற்கு வந்தால் அப்படி செலவழிக்கிற பணம் எல்லாம் வீணாகப் போய்விடும். அதைப்போல பூரண மதுவிலக்கு வேண்டுமென்கிற கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இப்போது போடப் படுகிற பணமெல்லாம் வீணாகிவிடும். எனவே, இவற்றை எல்லாம் நீங்கள் மறு பரிசீலனை செய்தால் நன்றாக இருக்குமோ என்று நான் எண்ணுகிறேன். மற்றவகையில் நிலுவையில் இருப்பவற்றை வசூலிப்பதற்கு நாங்கள் எந்த வகையிலும் தடையாக இருப்பதற்கு இல்லை. அரசாங்கத்திற்கு வருகிற வருவாய் வரட்டும்.

(பிற்பகல் 5–10)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதி கொடுத்ததற்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச்சட்டத் திருத்தமானது எப்படி நிலுவையை வசூல் பண்ணுவது என்பதற்காகத்தான். பரம்பரை யாக ஏலம் எடுப்பவர்கள், என்ன திருத்தம் எப்படி போட்டாலும் ஏலம் விடுகிற தருணத்தில் சர்டிபிகேட் எப்படியோ வாங்கி வந்து விடுகிறார்கள். எனக்கு இவ்வளவு சொத்து இருக்கிறது. இவ்வளவு பணம் இருக்கிறது என்று சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறார்கள். ஏலம் விடப்பட்டு, கிட்டே போகிறபோது அந்த சொத்து யார் மீது இருக்கிறது என்று பார்த்தால் அதில் கருத்து வேறுபாடு வருகிறபோது நிலுவை நின்று விடுகிறது. இது பரம்பரையாக நடந்து கொண்டு வருகிறது. எந்தக் கட்சி எப்படியிருந்தாலும், எந்த ஏலமானாலும் சரி, ஏலம் விடுகிறபோது, சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வருகிறபோது, எப்படியாவது ஏலம் எடுப்பது என்று ஏலத்தில் கலந்துகொண்டு விடுகிறார்கள். பின்னால் பாக்கி நிற்கிறபோது ஒரு சங்கமே ஏற்படுத்தி விடுகிறார்கள். ஒருவர், இரண்டு பேர் பாக்கி இருந்தால் நடவடிக்கை எடுக்க லாம், வசூல் செய்யலாம். எல்லோரும் பாக்கியாக இருக்கிற போது என்ன செய்ய முடியும்? யார் யார் ஏலம் எடுக்கிறார் களோ அவர்கள் அத்தனைபேரும் பாக்கி வைத்து விடுகிறார்கள். சங்கம் வைத்து கோர்ட்டிற்குப் போய் விடுகிறார்கள். அது மாதிரியான கட்டம் வராமல் நாம் பணத்தை வசூல் செய்ய வேண்டும், காரணம் நமக்கு ரெவின்யூ அதிகமாக தேவையாக இருக்கிறது. ஏற்கெனவே கவர்னர் சர்க்காரில் ஏராளமாகக் கடனை வைத்து விட்டு போய் விட்டார்கள். அதற்காகவாவது இதை நாம் நடத்தவேண்டிய ஒரு பொறுப்பில் இருப்பதால்,

முதலில் ஏலம் விடும்போதே அந்தப் பணத்தை வசூலிக்க ஏதாவது முகாந்திரத்தைக் கண்டுபிடித்து அந்தமுறையில் ஏலம் விடும்படியாக கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

திரு. என். கணபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன். ஒரே ஒரு சிறு பிரச்சினையை இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 18 (ஐ) செக்ஷனில் இந்த மதுவிலக்கு பாக்கி அந்த சொத்தின்மீது 'ஃபர்ஸ்ட் சார்ஜ்' ஆகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது சாதாரணமாககடன்பட்டவர்கள் எப்படி யாவது கடனைக் காண்பிக்காமல் சொத்துக்களை காட்டாமல் ஏமாற்றிவிட்டு சென்று விடுவார்கள். இது சாதாரணமாக நடைமுறையில் இருக்கிற பழக்கம். எனவே, மது விலக்கு சம்பந்த மாக பாக்கி இருப்பவர்கள்சொத்துக்களை, இந்த பாக்கி என்பதே ஒரு வில்லங்கமாக சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீசில் பதிவு செய்கிற அளவிற்கு சப்-ரெஜிஸ்ட்ரார்களுக்குத் தெரிவித்து, அந்த சொத்து வில்லங்கத்திற்கு உட்பட்டது என்பதை அறிவிக்கிற வகையில் ஒரு விதிமுறையை உருவாக்கினால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்து, இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு சட்டத்தைத் திருத்துவதற்காக தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்டம் இப்பேரவையின் முன்னால் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவின் முக்கிய நோக்கம் அரசாங்கத்திற்கு வரவேண்டிய ஆயத்தீர்வையை கண்டிப்பான முறையில் வசூலிப்பதற்கு கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடி வாகும். 1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு சட்டத்தில் தற்போது ஆயத்தீர்வை நிலுவைகளை கண்டிப்பான முறையில் வசூலிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் மேற்படி சட்டத்தின்கீழ் கள் மற்றும் சாராயக் கடைகள் சம்பந்தமாக 1981-ஆம் ஆண்டிலும், அதற்கு பின்பும் வெளியிடப் பட்ட விதிகளில், Tamil Nadu Toddy and Arrack Shops (Disposal on Auction) Rules 1981 மற்றும் Tamil Nadu Arrack Shops (Disposal on Auction) Rules 1986. 'notional loss' என்ற கணக்கை வைத்து வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் 'Revenue Recovery Act'-ன்கீழ் வசூலிக்க வகை செய்யப்பட்டிருந்தது. எனவே, ஆயத்தீர்வை மற்றும் ஏனைய கட்டணங்களை கண்டிப்பான முறையில் வருவாய் வசூல் சட்டத்

தின்கீழ் வசூலிக்க வகை செய்ய தற்போது மது விலக்கு சட்டத்தில் 18 (ஐ) என்னும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலமாக சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

ஆந்திர மாநில ஆயத்தீர்வைச் சட்டத்திலேயும் ஆயத்தீர்வை நிலுவைகளை வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் வசூலிக்க வகை செய்யப்பட்டு உள்ளது. கடந்த 1971 ஆம் வருடம் மதுவிலக்கு தளர்த்தப்பட்டபோது, அப்போது நடைமுறையில் இருந்த 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் அமுல்படுத்தப் படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டு—suspension of the operation of Tamil Nadu Prohibition Act, 1937—அதற்குப் பதிலாக 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆயத் தீர்வைச்சட்டம் நடை முறைக்கு வந்தது, அச்சட்டத்தில் ஆயத் தீர்வை நிலுவைகளை வசூலிக்க வழிவகை இருந்தது. ஆனால் இப்போது வசூலிக்க வேண்டிய ஆயத் தீர்வை நடைமுறையில் பாக்கி ஏற்பட்டு, அதை வசூலிப்பதற்கு போதுமான அதிகாரம், சட்டப்பூர்வமான அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லாத காரணத்தால், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இருக்கிறோம். குறிப்பாக நான் சில புள்ளிவிவரங்களைச் சொல்லவேண்டும் என்று கருதுகிறேன். ஆயத் தீர்வை நிலுவைகளைப்பற்றிய சில விவரங்கள். 1971 ஆம் ஆண்டிலேயிருந்து 1974 ஆம் ஆண்டு வரை ஆயத் தீர்வை வருடங்கள் அதிலே பாக்கி 2 கோடி 87 லட்சம். 1971–1974 ஆம் ஆண்டுகளில், தி.மு.க. ஆட்சியின் காலத்திலே அன்றைக்கு பாக்கியாக இருந்த தொகை 2 கோடியே 87 லட்சம். முந்தைய ஆட்சியிலே, 1981-லேயிருந்து 1986 ஆம் ஆண்டு ஆயத் தீர்வை வருடங்களில் பாக்கியைக் கணக்குப் பார்க்கும்போது 60 கோடியே 58 லட்சமாக இருக்கிறது. 60 கோடியே 58 லட்சம் ரூபாய் பாக்கி ஆயத் தீர்வையிலே வரவேண்டியதாக இருக்கிறது. இது பல காரணங்களினாலே ஏற்பட்டு இருப்பதாக நான் கருதுகிறேன். விவரங்களுக்கு உள்ளே எல்லாம் நான் செல்ல விரும்பவில்லை.

நம்முடைய உறுப்பினர்களும் இங்கே ஆயத் தீர்வையைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக வேறு பிரச்சினைகளைப் பேசியதால், அதற்கு விடைகளை சொல்லவேண்டிய நிலையில் நான் இருக்கிறேன். ஏற்கெனவே 2 கோடியே 87 லட்சம் ரூபாய் பாக்கியை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆயத் தீர்வைச் சட்டத்திலே இடம் இருந்தது, ஆனால் 1981–1986 ஆம் ஆண்டு பாக்கி 60 கோடியே 58 லட்சம். இதை இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக, ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் மூலமாக வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தத்தை நாம் இன்றைக்கு இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

1989 மே 11]

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுகின்றபோது, பதில் உரையில் கூறுகின்றபோது 60 கோடிக்கு மேலே நிலுவை இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு கோடிக்கு மேலே பாக்கியாக உள்ள தனிப்பட்ட நபர்கள் யாராவது இருந்தால், அவர்களுடைய பெயரை வெளியிட முடியுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. தாங்கள் தனியாக கேள்வி போட்டால் ஒரு கோடி என்ன, எவ்வளவு கொடுக்கவேண்டும் என்ற விவரங்களை எல்லாம் கூட அரசு வெளியிடத் தயார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நமது அரசாங்கத்தின் சார்பாக மது பானச் சில்லறைக் கடைகளை ஏலத்தில் விடவேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறது. தமிழ்நாடு அரசின் மது பானச் சில்லறைக் கடை ஏல முறையை எதிர்த்து ஏற்கெனவே மதுபான சில்லறைக் கடைகளை வைத்திருந்தவர்களில் சிலர் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைப் போட்டிருந்தார்கள். அந்த ரிட் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அதற்குமேல் சென்னை உயர் நீதிமன்றத்தில் பெஞ்சிற்கு அப்பீலைக் கொடுத்தார்கள். அந்த அப்பீலை விசாரித்த உயர்நீதிமன்றம் ஏல முறைக்கு தடை விதிக்க முடியாது என்று கூறிவிட்டது. அதோடு அவர்கள் விடவில்லை. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அவர்கள் வழக்கு தொடர்ந்தார்கள். ஏல முறையில் மதுபானக் கடைகள் கொடுப்பதற்கு தடை விதிக்கவேண்டும் என்று வழக்குப் போட்டார்கள். ஏறத்தாழ 50 பேர்களுக்கு மேலே அதுபோல 5 வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள் அவர்களுக்காக பிரபல மான வக்கீல்கள் எல்லாம் ஆஜராகி இருக்கிறார்கள். திரு. ஏ. கே. சென், திரு. ஏ. கே. சங்குலி, திரு. யு. ஆர். லலித், திரு. கப்பீல் ஜுபர், தமிழக அரசின் முன்னாள் சட்டத்துறைச் செயலாளர் திரு. எஸ். வடிவேல் ஆகிய வழக்கறிஞர்கள் மிகத் திறமையாக வாதாடினார்கள். இன்று காலை உச்ச நீதி மன்றத்தில் வாதாடினார்கள். தமிழக அரசின் சார்பாக திரு. எப். எல். நாரிமன் அவர்களும் மற்றும் உதவியாக திரு. கே. ராஜேந்திர சௌத்திரி, திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்கள் ஆஜராகி எதிர்வாதம் நடத்தினார்கள். இவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். ரங்கநாத மிஸ்ரா அவர்கள் அப்பீல் மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே ஏற்கெனவே தமிழக அரசு அறிவித்தபடி இந்த மதுபான சில்லறைக் கடைகளை ஏல முறையில் மே மாதம் 15 ஆம் நாளிலிருந்து ஏலம் விடுவதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் குறித்தபடி குறித்த தேதியில் ஏற்கெனவே அறிவித்தபடி ஏலத்தை முறைப்படி நடத்துவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே சாராய சாம்ராஜ்ய அதிபர்கள் எவ்வளவு இதில் மூழ்கி இருக்கக் கூடும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்றுதான் நான் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே இப்படி கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தம் குறிப்பாக நிலுவைகளை வசூலிப்பதற்காகத்தான் என்பதைத் தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவை நீங்களெல்லாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை ஏற்றுக்கொண்டு சட்டமாக ஆக்கித் தரும்படி கேட்டு அமைகிறேன்.

(பிற்பகல் 5-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1-'முகப்புரை' நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.